**06.06.2018**

**பொருள் எண்.1**

இந்நகராட்சிக்கு எதிராக சொத்துவரி விதித்தை ஆட்சேபித்து ஏழுகரை செல்லங்கூட்டத்து கவுண்டர்கள் சங்கம், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.No.15133/2005-ல் வழக்கு தொடர்ந்து வழக்கின் தீர்ப்புரை 30.05.2013ல் வழங்கப்பட்டது. மேற்கண்ட வழக்கின் தீர்ப்புரையின் மீது சட்டக்கருத்துரு வழங்குமாறு திரு.ரவி மாவட்ட அரசு வழக்கறிஞரிடம் கோரப்பட்டது. 28.05.2018ந் தேதிய கடிதத்தில் சட்டக் கருத்துரு வழங்கியமைக்கும் ரூ.5,000/– வழங்குமாறு கோரியுள்ளார். அன்னாருக்கு வழக்கு கட்டணம் ரூ.5000/– வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.14837/2003/அ3)

**பொருள் எண்.2**

தொழில்வரி சட்டம் 1988ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் எண்.59 இரண்டாவது திருத்தம் பத்தி எண்.124–D 13-ன்படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12503/18/ஆர்1, நாள்.21.05.2018ன்படியும் தொழில்வரி கேட்பு தொகையினை 01.10.2018ன் முதல் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை குறைந்தபட்சம் 25 % அதிகபட்சம் 35% அதிகப்படுத்தி வரி உயர்வு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அதன் விபரப் பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு மன்றத்தின் பார்வைக்கு.

| வ. எண் | சுராசரி அரையாண்டு வருமானம் | அரையாண்டு வரித்தொகை | 35% அதிகபட்சம் | புதிய வரித்தொகை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | ரூ. 21000 வரை பெறுவோர் | இல்லை | – | – |
| 2 | ரூ.21001 முதல் 30000 வரை | 120 | 162 | 162 |
| 3 | ரூ.30001 முதல் 45000 வரை | 300 | 405 | 405 |
| 4 | ரூ.45001 முதல் 60000 வரை | 590 | 797 | 797 |
| 5 | ரூ.60001 முதல் 75000 வரை | 890 | 1202 | 1202 |
| 6 | ரூ.75001 முதல் மற்றும் அதற்கு மேலும் | 1175 | 1250 | 1250 |

01.10.2013 முதல் 5 ஆண்டுகளுக்கு பிறகு கலம் 5ல் உள்ளபடி வரிசை எண்.1 முதல் நான்கு இனங்களுக்கு 35% சதவீதம் தொழில்வரி உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.2501/18/அ4)

**பொருள் எண்.3**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.எஸ்.சுரேஷ்பாபு த/பெ.சுப்பிரமணி என்பவர் தனது குடும்ப சூழ்நிலையின் காரணமாக திருச்செங்கோடு நகராட்சியில் இருந்து குமாரபாளையம் நகராட்சிக்கு பணி மாறுதல் செய்ய 19.04.2018 அன்று விண்ணப்பித்துள்ளார். அன்னாரை குமாரபாளையம் நகராட்சிக்கு பணி மாறுதல் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1986/2018/எச்1)

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்குட்பட்ட 33 வார்டு பகுதியில் உள்ள 64 சமுதாய கழிப்பிடங்கள் நகராட்சி துப்புரவு பணியாளர்கள் 64 நபர்கள் மூலம் தினமும் சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. அரசு அனுமதி வழங்கப்பட்ட 235 நபர்களின் 142 நபர்கள் மட்டுமே தற்போது பணியில் உள்ளனர். மீதமுள்ள 93 நபர்கள் பணி ஓய்வு மற்றும் இறப்பின் காரணமாக பணிபுரியவில்லை. இதனால் இந்நகராட்சியில் துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். எனவே தனியார் துப்புரவு பணியாளர்கள் அல்லது NGO பணியாளர்கள் மூலம் கழிப்பிடங்களை சுத்தம் செய்யும் பணிக்கு பணியமர்த்தினால், இந்நகராட்சி துப்புரவு பணிகள் பாதிப்பின்றி செய்யப்படும். தற்போது நகராட்சி பணியாளர்கள் 64 நபர்களுக்கு அரைநாள் ஊதியம் தோராயமாக ரூ.250/– என்றால் மாதம் ஒன்றுக்கு ரூ.4,80,000/– ஆகும். எனவே மாவட்ட ஆட்சியர் நிர்ணயித்துள்ள தினக்கூலி அடிப்படையில் தனியார் துப்புரவு பணியாளர்கள் அல்லது NGO பணியாளர்களைக் கொண்டு பணி செய்ய ஆகும் தோராயமாக செலவினம் ஒரு மாதத்திற்கு தொகை ரூ.4,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொள்ளவும் பணி செய்யவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.2097/2018/எச்1)

**<u>பொருள் எண்.5</u>**

திருச்செங்கோடு நகராட்சி பகுதிகளில் சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக ரூ.3.95 கோடி மதிப்பீட்டில் கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெற விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய மதிப்பீட்டுடன் பிரேரணைகள் சமர்ப்பிக்கவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

<table>
<tr><th>Sl.No</th><th colspan="2">Description</th><th>Cost in Rs.</th></tr>
<tr><td>1</td><td rowspan="6">Name of work:</td><td>Construction of Micro Compost centre 1 at Animoor Compost Yard in Tiruchengode Municipality.</td><td>1500000.00</td></tr>
<tr><td>2</td><td>Construction of Micro Compost centre 2 at Animoor Compost Yard in Tiruchengode Municipality.</td><td>1500000.00</td></tr>
<tr><td>3</td><td>Construction of Micro Compost centre at Sandaipettai Market in Tiruchengode Municipality.</td><td>6500000.00</td></tr>
<tr><td>4</td><td>Construction of On Site Composting Centre at Ward no.11 Vellalar Colony Park,Koottappalli TNHB Colony Park in Ward no.12,Koottappalli TNHB Colony Park In Ward no.12, Mahadevapuram Park in ward no.28, Kollappatti TNHB Colony Park in ward no.30, in Tiruchengode Municipality.</td><td>3850000.00</td></tr>
<tr><td>5</td><td>Supply and Delivery Of Battery Operated Vehicle 25 Nos and Light Commercial Vehicle 8 Nos in Tiruchengode Municipality.</td><td>8980000.00</td></tr>
<tr><td>6</td><td>Removal Of Legacy Waste Dumped In The Animoor Compost Yard Through Bio-Mining Process in Tiruchengode Municipality.</td><td>17200000.00</td></tr>
<tr><td colspan="3">Total Amount</td><td>39530000.00</td></tr>
</table>

**<u>அலுவலக குறிப்பு:</u>**

தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1447/2017/இ1)

**<u>பொருள் எண்.6</u>**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 12, கூட்டப்பள்ளி காலனி, சாயபுகாடு பகுதியில் புதியதாக 7 எண்ணிக்கையில் தெரு விளக்குகள் அமைக்க ஆகும் செலவினத்தை அப்பகுதி மக்களே செலுத்த சம்மதம் தெரிவித்துள்ளதால் மேற்கண்ட பகுதியில் புதியதாக 7 எண்ணிக்கையில் தெரு விளக்குகள் அமைக்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2710 /2018/இ2)

**<u>பொருள் எண்.7</u>**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 29, நரிப்பள்ளம் தட்டுக்கடை பகுதி மெயின் ரோடு சந்திப்பில் உள்ள பெரிய அரசமரத்தின் கிளைகள் அப்பகுதியில் உள்ள வீடுகளில் மோதி விழுவதால் இதனை வெட்டி அப்புறப்படுத்த வருவாய் கோட்டாட்சியர், திருச்செங்கோடு அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளதாலும், மேலும் மாவட்ட வன அலுவலர் இதன் கிளைகளின் மதிப்பு ரூ.12438/– ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாலும். மேற்கண்ட இடத்தில் உள்ள அரசமரத்தின் கிளைகளை வெட்டி அப்புறப்படுத்தவும் மற்றும் ரூ. 12321/– ஏல ஆரம்பத் தொகையாக நிர்ணயித்து ஏலம் விடவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஏலம் கோரியதை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.7564/2018/இ2)

**<u>பொருள் எண்.8</u>**

திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண். 29, நரிப்பள்ளம் தட்டுக்கடைப் பகுதியில் உள்ள அரசமரத்தின் கிளைகளை வெட்டி அப்புறப்படுத்த மற்றும் மரத்தை உபயோகிக்க 16.05.2018 அன்று நடைபெற்ற ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் விபரம் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏலம் கோரியவரின் பெயர் | உயர்ந்தபட்ச கேள்வி |
|---|---|---|
| 1<br>2 | மாதேஸ்குமார்<br>ராஜமாணிக்கம் | 1. ரூ.12450/–<br>2. ரூ.12500/– |

**அலுவலக குறிப்பு:**

1. மேற்கண்ட ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலம் கோரிய வ.எண்.2ல் உள்ள திரு. ராஜமாணிக்கம் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கலாம்.
2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 7564/2018/இ2)

**<u>பொருள் எண்.9</u>**

திருச்செங்கோடு நகராட்சியில் குடிநீர் பிரிவில் ஓட்டுநராக பணிபுரிந்து தற்போது வயது முதிர்வு காரணமாக ஓய்வில் உள்ள திரு.தி.ச. லியாகத் அலி என்பவர் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் விபத்தில்லாமல் பணி செய்தமைக்கு அரசாணை (நிலை) எண்.235, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந4) நாள். 01.10.1997 ன் படி தமிழ்நாடு கைவினை பொருட்கள் வளர்ச்சி கழகத்தில் இருந்து 4 கிராம் அளவிலான தங்கப் பதக்கம் பெற்று வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 31019/2018/ஜே–3ல் உத்தரவிட்டுள்ளபடி மேற்கண்ட தங்கப்பதக்கம் தமிழ்நாடு கைவினை பொருட்கள் வளர்ச்சிக் கழகத்தில் இருந்து வாங்க ஆகும் செலவினம் ரூ.16,200/–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது. .

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 3514 /2017/இ1)

**<u>பொருள் எண்.10</u>**

திருச்செங்கோடு நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள டோனர்களை Refill செய்ய 2018–19ம் ஆண்டிற்கு முழுவதும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,000/–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது. .

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2721 /2018/இ2)

**பொருள் எண்.11**

திருச்செங்கோடு நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டம் 2013–14ன் கீழ் (IUDM 2013-14) குடிநீர் மேம்பாட்டு பணிக்காக ரூ.2370.00 இலட்சம் மதிப்பீட்டில் அரசாணை எண். 492, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 19.09.2013ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர், சென்னை அவர்களின் செயல் முறை ஆணை ந.க.எண். 44712/2013/DO1, நாள். 13.01.2014ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 15.10.2014ல் மூன்றாவது அழைப்பில் M/s.Sattva Engineering Construction Pvt Ltd., சென்னை நிறுவனத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் தலைமையில் 29.01.2015 அன்று நடைபெற்ற Tender Award Committee Meeting ல் மதிப்பீட்டை விட (+) 14.90 % கூடுதலாக நிர்ணயித்து திருச்செங்கோடு நகர்மன்ற அனுமதி பெற்று பணியை துவங்க உத்தரவிட்டதின் பேரில் திருச்செங்கோடு நகர்மன்ற தீர்மான எண்.903, நாள்.04.02.2015ல் ஒப்புதல் பெறப்பட்டு 19.02.2015ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் மேற்கண்ட பணியில் மதிப்பீடு தனியார் நிறுவன ஆலோசகரால் தயார் செய்யப்பட்டதால் இத்திட்டத்தில் அமைக்கப்பட்ட புதிய குழாய்களை ஏற்கனவே உள்ள பழைய குழாய்களுடன் இணைக்கும் பொருட்டு Interlink–க்கு பணிகள் இத்திட்டத்தில் வழிவகை செய்யவில்லை.

எனவே மேற்கண்ட பணியில் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாமல் உள்ள இனங்களுக்கும் மற்றும் மதிப்பீட்டில் உள்ள அளவுகளை விட பணியின் அவசியம் கருதி கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட இனங்களுக்கும் இதனால் ஏற்படும் கூடுதல் செலவினத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி வேண்டி 25.01.2018ல் மற்றும் திருத்திய பிரேரணைகள் 13.03.2018ல் சமர்ப்பிக்கப்பட்டதின் பேரில் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 44712/2013/DO1, நாள். 28.05.2018ல் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாமல் உள்ள இனங்களுக்கும் (Supplemental Item) மற்றும் மதிப்பீட்டில் உள்ள அளவுகளைவிட கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட இனங்களுக்கும் இதனால் ஏற்படும் கூடுதல் செலவினம் மதிப்பீடு ரூ.2370.00 இலட்சத்தை காட்டிலும் கூடுதல் செலவினம் ரூ.2603.54012 இலட்சத்திற்கும் Work slip அனுமதி பெறப்பட்டுள்ளதை தனி அலுவலர் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றத்தில் பதிவு செய்யலாம்.

(கோப்பு எண். 560 /2013/இ1)

**பொருள் எண்.12**

திருச்செங்கோடு நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டம் 2013–14ன் கீழ் (IUDM 2013-14) குடிநீர் மேம்பாட்டு பணிக்காக ரூ.2370.00 இலட்சத்திற்கு அரசாணை எண். 492, நகராட்சி நிர்வாக குடிநீர் வழங்கல் துறை நாள். 19.09.2013ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர், சென்னை அவர்களின் செயல் முறை ஆணை ந.க.எண். 44712/2013/DO1, நாள். 13.01.2014ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 15.10.2014ல் மூன்றாவது அழைப்பில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.RPP India Projects Ltd, Erode. ஒப்பந்தப்புள்ளியில் நிராகரிக்கப்பட்டு M/s. Sattva Engineering Construction Pvt Ltd., சென்னை ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு (+) 29.11% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதால் விலையை குறைக்க கோரியதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் தலைமையில் 29.01.2015 அன்று நடைபெற்ற Tender Award Committee Meeting ல் M/s. Sattva Engineering Construction Pvt Ltd சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை இறுதியாக மதிப்பீட்டை விட (+) 14.90 % கூடுதலாக நிர்ணயித்து திருச்செங்கோடு நகர்மன்ற அனுமதி பெற்று பணியை துவங்க உத்தரவிடப்பட்டது. மேலும் மேற்படி பணிக்கு ஆகும் கூடுதல் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியிலிந்து மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். 903, நாள். 04.02.2015ல் ஒப்புதல் பெறப்பட்டு பணி உத்தரவு 19.02.2015ல் வழங்கப்பட்டது. இந்நிலையில் நகராட்சியில் போதுமான நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் மேற்கண்ட பணிக்கு நகராட்சி பங்குத் தொகை வழங்க இயலாத நிலை ஏற்படும் என்பதால் நிதி ஆதாரம் வேண்டி இடைவெளி நிரப்பும் திட்டத்தின் கீழ் ரூ.456.00 இலட்சத்திற்கு நிதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு 26.09.2016ல் கடிதம் அனுப்பப்பட்டு இதன் பேரில் ரூ. 456.00 இலட்சத்திற்கு இடைவெளி நிரப்பும் திட்டம் 2017–18ன் கீழ் 31.10.2017ல் மேற்கண்ட பணிக்கு IDRF – TUFIDCO மூலம் இந்நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு 24.01.2018ல் இந்நகராட்சி வங்கி கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே இடைவெளி நிரப்பும் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட நிதியை IUDM 2013–14 திட்டத்திற்கு செலவினம் மேற்கொண்டமைக்கு தனி அலுவலர் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றத்தில் பதிவு செய்யலாம்.

(கோப்பு எண். 560 /2013/இ1)

<u>பொருள் எண்.13</u>

திருச்செங்கோடு நகராட்சியில் பொறியியல் பிரிவில் மின் கம்பியாளராக பணிபுரிந்து வரும் திரு.எஸ்.பாபு என்பவர், தனது வயது முதிர்ந்த தாயை நேரடி கவனிப்பில் பார்த்து கொள்ள வேண்டியுள்ளதால் இராசிபுரம் நகராட்சிக்கு பணியிடை மாறுதல் வேண்டி விண்ணப்பித்துள்ளார். எனவே அன்னாரின் அசல் விண்ணபத்துடன் பணியிடை மாறுதல் கோரும் கருத்துருக்களை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு சமர்ப்பிக்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2805 /2018/இ2)

<u>பொருள் எண்.14</u>

பொது நிதி 2018–19ன் கீழ், கீழ்க்கண்ட பணிக்கு 06.06.2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட சந்தைபேட்டை மற்றும் உழவர் சந்தை ஆகிய இடங்களில் குப்பைகள் உற்பத்தியாகும் இடத்திலேயே உரமாக்கும் திட்டத்தின் படி ( On Site Composting) குப்பைகளை உரமாக்க Compost cubical tub மற்றும் Shed அமைக்கும் பணி | 4,00,000/- | 1. கே.செந்தில்முருகன்<br>2. ஜி.கமலக்கண்ணன் | (-) 0.29%குறைவு<br>(+)1.80 % அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1) வரப்பெற்ற இரு ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்பந்ததாரர்களும் டெபாசிட்டிற்கு டெபாசிட் தொகையாக ரூ. 4000 வீதம் செலுத்தி சலான் இணைத்துள்ளனர்.

2) வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட(–) 0.29 % குறைவாக கொடுத்துள்ள கே.செந்தில்முருகன் அவர்கள் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

(கோப்பு எண். 2409/2018/இ1)

<u>பொருள் எண்.15</u>

பொது நிதி 2018–19ன் கீழ், கீழ்க்கண்ட பணிக்கு 06.06.2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| வார்டு எண்.5, வேல்முருகன் நகர் பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 6,30,000/- | 1. பி. சிவபெருமாள்<br>2. பி. பரமசிவம் | (+) 4.40%அதிகம்<br>(+) 9.90% அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1) வரப்பெற்ற இரு ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்பந்ததாரர்களும் டெபாசிட்டிற்கு டெபாசிட் தொகையாக ரூ. 6300 வீதம் செலுத்தி சலான் இணைத்துள்ளனர்.

2) வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட(+)4.40 % அதிகம் கொடுத்துள்ள திரு.பி. சிவபெருமாள் அவர்கள் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

(கோப்பு எண்.2570/2018/இ1)

<u>பொருள் எண்.16</u>

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் வாகனங்களுக்கு வாகன எண்.TN34 R3567, TN34 R1275, TN34 R1365 வாகனங்களுக்கு பாலிசி காலம் முடிவடைவதால் புதுப்பிக்க ஆகும் தொகை ரூ.43,529/–ஐ யுனைடெம் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொதுசுகாதாரப்பிரிவின் அவரச அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.2703/2018/எச்1)

**<u>பொருள் எண்.17</u>**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் கூட்ட நாள்.05.06.2018ன் கூட்ட அறிவுரைகளின்படி நகராட்சி பகுதியில் சேகரமாகும் மக்கும் குப்பைகளை குப்பை உருவாகும் இடத்தலேயே உரமாக்க ஏதுவாக MCC Centre மற்றும் On site Composting Centre இடங்களை தேர்வு செய்து அவற்றினை Auto cad மூலமாக Mapping செய்து மூன்று தினங்களில் ஒப்படைக்க அறிவுறுத்தியுள்ளார். எனவே மேற்கண்ட பணிகளை செய்து முடிக்க தனியார் பொறியாளரிடம் கொடுத்து வரைபடம் வரைந்து முடிக்க முன்பணமாக தொகை ரூ.25,000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொதுசுகாதாரப்பிரிவின் அவரச அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று துப்புரவு ஆய்வாளர் திரு.நிருபன்சக்ரவர்த்தி அவர்களுக்கு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.2799/2018/எச்1)

**<u>பொருள் எண்.18</u>**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் வாகனம் TN34 R3567 வாகனத்திற்கு புதிய பேட்டரி திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிமிடெட் நிறுவனத்தில் வாங்கவும், பணி உத்தரவு வழங்கவும் புதிய பேட்டரி வாங்க உத்தேச செலவின தொகை ரூ.7550/–க்கு தனி அலுவலர் முன் அனுமதி மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொதுசுகாதாரப்பிரிவின் அவரச அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கவும், பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.2527/2018/எச்1)

**<u>பொருள் எண்.19</u>**

திருச்செங்கோடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் திருச்செங்கோடு கிராமம் சீத்தாராம்பாளையம் புல எண்.70–2 மற்றும் 70–3ல் 3 செண்ட் நிலத்திற்கு வீட்டு மனைப்பட்டா வழங்கியது தொடர்பாகவும், விதிமுறைகளுக்கு புறம்பாக வியாபார நோக்கத்தில் கட்டிடங்கள் பயன்படுத்தி வருவது தொடர்பாக திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திருமதி.பொன்.சரஸ்வதி அவர்கள் நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு W.P.No.32833/17 தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கினை நகராட்சி சார்பாக ஏற்று நடத்துவதற்கு திரு.ஏ.என்.தம்பிதுரை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.7792/2017/எப்1)